**செய்தி வெளியீடு எண்: 05/04/2021** **நாள்: 30.04.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**மெட்ரோ இரயில் சேவைகள் மே மாதத்தில் வரும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை 1 மணி நேர இடைவெளியில் இயக்கப்படும்.**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மெட்ரோ இரயில்களிலும் கொரோனா வைரஸை தடுப்பதற்காக போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் அனைத்து பயணிகளுக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் கை சுத்திகரிப்பான்கள் வைக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய அறிவிப்புகள் அவ்வப்போது மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் அறிவிக்கப்படுகின்றன.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படும் நேரம் கடந்த 20.04.2021 முதல் மாற்றியமைக்கப்பட்டது. மேலும் தமிழக அரசின் ஆணைப்படி மே மாதத்தில் வரும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் மெட்ரோ இரயில் சேவைகள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும். மெட்ரோ இரயில் சேவைகள்;

1. விம்கோ நகர் மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை (நீலவழித்தடம்) – 1 மணி நேர இடைவெளி;
2. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ முதல் விமான நிலையம் வரை (அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ மற்றும் கோயம்பேடு மெட்ரோ வழியாக) (பச்சை வழித்தடம்) – 2 மணி நேர இடைவெளி;
3. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ முதல் பரங்கிமலை மெட்ரோ வரை (அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ மற்றும் கோயம்பேடு மெட்ரோ வழியாக) – 2 மணி நேர இடைவெளி.

நாள் முழுவதும் மெட்ரோ இரயில் சேவைகள் உச்ச மணி நேரம் இல்லாமல் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில்

பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியை கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**